சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நீலகிரி மாவட்டம் – திரு.வே.சிவக்குமார் த/பெ காலஞ்சென்ற திரு.வேதகிரி – கருணை அடிப்படையில் தட்டச்சராக பணிநியமனம் – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [பணி–9(3)] துறை

அரசாணை (3டி) எண்: 135 நாள்:24.08.2015

படிக்கவும்:

1. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.அ3/38914/2006, நாள்.21.01.2008.
2. வருவாய் நிருவாக கூடுதல் ஆணையரின் கடித எண்.ஆகு3/88226/2008, நாள் 09.03.2009 மற்றும் 09.03.2010.
3. அரசு கடித எண்.12394/பணி–9(3)/2010–16, வருவாய்த் துறை, நாள்.13.10.2014
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண். 7435/சி.டி.அ1/2014, நாள் 20.07.2015.

***********

ஆணை:

நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், உதவியாளராகப் பணியாற்றியபோது 07.02.2001 அன்று காலமான திரு.வேதகிரி என்பவரின் மகன் திரு.வே.சிவக்குமார் என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டு, தனியர் 16.04.2007 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.வே.சிவக்குமார் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 16.04.2007 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் முறையாக வரன்முறை செய்ய ஆணை வேண்டி நீலகிரி மாவட்ட ஆட்சியர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் ஏற்று மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. காலஞ்சென்ற உதவியாளர் திரு.வேதகிரி என்பவரின் மகன் திரு.வே.சிவக்குமார் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளும் பெற்றுள்ளதாலும் தட்டச்சர் பணியிடம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வருவதாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.வே.சிவக்குமார் என்பவரது பணியை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் தட்டச்சர் பதவியில் 16.04.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்வதற்கு 1954–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(பி)யின் பிற்பகுதியின்படி தேர்வாணையத்தின்

இசைவினை பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திடம் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரப்பட்டது.

4. நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் உதவியாளராகப் பணிபுரியும் போது 07.02.2001 அன்று காலமான திரு.வேதகிரி என்பவரின் மகன் திரு.வே.சிவக்குமார் அவர்கள் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வருவாய் துறையில், நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் பணியமர்த்தப்பட்ட நாளான 16.04.2007 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் அவரது பணி வரன்முறைப்படுத்தப்பட ஏதுவாக தேர்வாணையம் தமது இசைவினை அளிக்கிறது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

5. மாவட்ட ஆட்சியரின் அறிக்கை மற்றும் வருவாய் நிருவாக கூடுதல் ஆணையரின் பரிந்துரை ஆகியவற்றை அரசு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கருத்துடன் ஆய்வு செய்து, நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தட்டச்சராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வே.சிவக்குமார் என்பவரை தட்டச்சர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 16.04.2007 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறைப்படுத்த அரசு ஆணையிடுகிறது.

6. திரு.வே.சிவக்குமார் என்பவர் தட்டச்சர் பதவிக்குரிய உடல் தகுதியைப் பெற்றிருக்கிறார் என்பதை நீலகிரி மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து மேற்குறித்த ஆணையை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா. எண்.22605/க்யூ–2/2014–1, நாள்26.09.2014–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்
அரசு செயலாளர்.

பெறுநர்

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம், நீலகிரி.
திரு.வே.சிவக்குமார், தட்டச்சர், நீலகிரி மாவட்டம்.
(நீலகிரி மாவட்ட ஆட்சியர் மூலமாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
பிரேசர் பாலச்சாலை, சென்னை –3.

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
மாநில கணக்காயர்(RAO), தலைமைச் செயலகம், சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

28/08/2015